Registered as a NewsPaper
பக்கங்கள் 04
விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM
Peoples Daily
மக்கள் தினசரி

நாதம்: 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | பங்குனி 22 | (04 - 04 - 1992) | சனிக்கிழமை | ஓசை: 46

## வெளிநாட்டுக் கடிதங்கள் இராணுவத்தால் அபகரிப்பு

வவுனியாவிற்கு அனுப்பிவைக்கப்படும் வெளிநாட்டுக் கடிதங்களைக் கைப்பற்றிச் செல்லும் இராணுவத்தினர் அவற்றிலுள்ள புகைப்படங்களையும், காசோலைகளையும் கைப்பற்றிக் கொள்வதாகத் தகவல் கிடைத்துள்ளது. சோதனைக்குட்படுத்துகிறோம் என்று கூறி தபாலகத்திலிருந்து கொண்டுசெல்லும் கடிதங்களில் பாதியை இராணுவம் திரும்பத் தபாலகத்திடம் கையளிப்பதில்லையாம். கைப்பற்றப்படும் தபால்களில் உள்ள காசோலைகளை எடுத்துக்கொண்டு சில கடிதங்களை மட்டும் இராணுவம் மீள ஒப்படைக்கின்றதாம். இராணுவத்தின் இந்நடவடிக்கையினால் வவுனியா பிரதம தபாலகம் பெரும் அவதிக்குள்ளாகியிருப்பதாக அதன் ஊழியர் ஒருவர் ஈழநாதத்திற்குத் தெரிவித்தார். (தி)

# கடற்புலிகளின் கண்ணிவெடி தாக்குதல்

# சிறிலங்கா பீரங்கிப்படகு படுசேதம்

## மாதகல் கடற்பரப்பில் சம்பவம்

(மாதகல்)

மாதகல் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையின் 'டோரா' ரக பீரங்கிப்படகு கடற் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கி பலத்த சேதமடைந்தது. நேற்றுக் காலை 8.00 மணியளவில் இச் சம்பவம் நிகழ்ந்தது.

கடற் புலிகளின் கண்ணியில் சிக்கிய இப் பீரங்கிப் படகிற்கு ஏற்பட்ட பாரிய சேதத்தைத் தொடர்ந்து அப்படகு முற்றாகச் செயலிழந்தது. இதே வேளை இச் சம்பவம் இடம் பெற்ற இடத்துக்கு விரைந்த மூன்று பீரங்கிப் படகுகள் இப் படகை கட்டி இழுத்துச் சென்றன. தாக்குதலுக்கு உள்ளான படகு மூழ்கும் நிலையில் இருந்தமையால் மிக விரைவாகவே தாக்குதல் நடை பெற்ற இடத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டது.

இதேவேளை தாக்குதல் இடம் பெற்ற இடத்திற்கு விரைந்த கடற்படை படகுகளில் இருந்து மாதகல் கரை

[4ஆம் பக்கம் பார்க்க]

# கடற்படை ரோந்தை தீவிரமாக்க இந்தியாவிடம் சிறிலங். கோரிக்கை

[கொழும்பு]

இந்தியப் பாக்குநீரிணைப் பகுதியில் இந்தியக் கடற்படையின் ரோந்து நடவடிக்கையை மேலும் பலப்படுத்துமாறு சிறிலங்கா அரசு இந்தியாவைக் கேட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை கைப்பற்றப் படைகள் யுத்தத்தில் முழுமூச்சாக ஈடுபட்டுள்ளன. படைகளின் பணி சாத்தியமாவதற்கு பாக்குநீரிணை வழியாகப் புலிகள் ஆயுதம் பெறுவது முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும் என்று சிறிலங்கா அரசு இந்தியாவைக் கேட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் புலிகளுக்கு ஆயுதமும், ஆளணியும் கொண்டுவரும்படகுப்போக்குவரத்து தடுக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றிச் சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் கிளான்சி பெர்னான்டோ இந்தியக்கடற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதிக் கடற்கரைகளில் உள்ள பாதுகாப்பான இறங்கு துறைகளுக்குப் புலிகளின் படகுகள் சென்றடைவதைப்பாதுகாக்கவும், வழிகாட்டவும் கடற்படைப் பிரிவொன்றை புலிகள் அமைத்திருப்பதாகத் தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்றும் சிறிலங்கா கப்பற் படைத் தளபதி தெரிவித்தார். [புலிகளின் கடற்படை அணி சிறிலங்காக்கடற்படைச் சிப்பாய்களைப் போல் சீருடை

## இவ்வருட நடுப்பகுதிக்குள் யுத்தத்திற்கு முடிவு

## அம்பாறை ராணுவ கெடுபிடி 30க்கு மேற்பட்டோர் கைது

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் கடந்த ஆறுநாட்களில் முப்பதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்கவேலாயுதபுரம், வம்முடியா குளம், சஞ்சி குடிச்சாறு பன்னல குளம், பம்மிட்டியாவ ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் 30க்கு மேற்பட்ட தமிழர்களை கைது செய்துள்ளனர்.

பல குடிசைகளும் தமிழ் மக்களின் உடைமைகளும் எரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## உண்ணாவிரத நிலைய இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூட்டுறவு சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட அன்னை பூபதியின் ஞாபகார்த்த உண்ணாவிரத நிகழ்வில் (இன்று நடைபெறவுள்ள) மாதனை முருகன் கோவிலில் நடைபெறவிருந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் சுதுமலை அம்மன் கோவிலுக்கு மாற்றப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில் பொலிசார் தீவிரசோதனை நடவடிக்கை

(திருக்கோணமலை)

திருக்கோணமலை பகுதியில் கடந்த ஒரு சில நாட்களாக சிறிலங்கா பொலிசார் சோதனை நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

திருமலைநகர் உட்பட பாலையூற்று, அன்புவழிபுரம் போன்ற பகுதிகளில் வீடுவீடாகச் செல்லும் பொலிசார் குடும்ப அட்டைகள், அடையாள அட்டைகளை பரிசீலித்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ராணுவ அட்டூழியத்திற்கு எதிராய் மட்டக்களப்பு மாணவர் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கடந்த 25 ஆம் திகதி ஏறாவூர் தமிழ் வித்தியாலயத்தினுள் புகுந்த சிறிலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டித்து மட்டக்களப்பில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று மாணவர்களால் நடத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் 2,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். "உலக அரசியாம் பாடசாலைகள் மீது குண்டு வீச்சை நிறுத்து", "சமூகத்தின் அச்சாணி மாணவர்கள் அதை உடைக்காதே" சிறிலங்கா அரசே அதை உலகம் ரசிக்காது, "அப்பாவி ஆசிரியர்கள் மீது அட்டகாசம் செய்யாதே", "சிறி எழும் தமிழீழ மாணவர்கள் முன்பு சிறிலங்கா அரசே நீ தூள் ஆவாய்", மாணவர்கள் மீதான கோழைத்தனமான தாக்குதலைநிறுத்து" போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில்

சாலை ஆகியபாடசாலைகளை சேர்ந்தமாணவர்கள்இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். இராணுவக் கெடுபிடிகள்மத்தியிலும் இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்கா ஆயுதப் படைகளின் நடவடிக்கைகளினால் தமிழ்ப் பாடசாலைகளின் செயல்பாடுகள் சீர்குலைந்து விட்டன. சுற்றிவளைப்பு தேடுதல்நடவடிக்கைகளின் போது மாணவர்கள் கைது

# இவ்வருட நடுப்பகுதிக்குள் யுத்தத்திற்கு முடிவு

## டி. பி. விஜயதுங்கா

இவ் வருட நடுபபகுதிக்குள் வடக்கு, கிழக்கு யுத்தத்திற்கு ஒரு முடிவு கட்டப்படும் என்று பிரதமர் டி. பி. விஜயதுங்கா நம்பிக்கை வெளியிட்டார்.

கண்டி புஷ்பதான மகளிர் வித்தியாலய பரிசளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் நாட்டின் அபிவிருத்தி தென்பகுதிப் பயங்கரவாதச் செயல்களாலும் வடக்கு, கிழக்கு யுத்தத்தினாலும் பெருமளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது. தென் பகுதி வன் செயல்களில் 10,000 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது ஆனால் வருடாந்தம் 25,000 மில்லியன் ரூபா வடக்கு, கிழக்கு யுத்தத்திற்காக செலவிடப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

# விமானத்தில் அகதிகளை வவு. கொண்டுவர திட்டம்

(கொழும்பு)

தமிழகத்திலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை விமான மூலம் வவுனியாவிற்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டு வருகிறது. எம். வி அக்டர் என்னும் கப்பல் திருக்கோணமலைக்கும் சென்னைக்குமிடையே பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போது பழுது அடைந்திருப்பதனால் விமான மூலம் கொண்டு வருவது பரிசீலிக்கப்படுகின்றதாம்.

இவ் விமான சேவை வாரத்தில் இருதடவை மேற்கொள்ளப்படுமெனவும், சென்னையிலிருந்து வவுனியாவிற்கு நேரடியாக இவர்கள் கொண்டு வரப்படுவர் எனவும் புனர் வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்டி சில்வா செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்.

# தமிழ் பாடசாலைகளில் சிங்களம் கற்பிக்க முயற்சி

## பாடநூலும் தயாராகி விட்டதாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் பாடசாலைகளில் சிங்களத்தை ஒரு பாடமாகக் கற்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. 'சிங்கள - தமிழ் புத்தகம்' என்ற பெயரிலேயே சிங்கள மொழி கற்பித்தல் நடைபெறவுள்ளது:

கல்வி உயர் கல்வி அமைச்சின் பணிப்பிற்கிணங்க ஆண்டு 4 - இல் கற்பிப்பதற்கென சிங்கள - தமிழ் புத்தகம் முதல் நிலை, என்னும் நூல் தேசிய கல்வி நிறுவனத்தால் தயாரிக்கப் பட்டுள்ளது.

ஆரம்ப கல்வி ஆலோசகர்கள் ஊடாக இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருக்கிறது முதலில் ஆரம்ப கல்வி ஆலோசகர்களுக்குப் பயிற்சி வழங்கி, அவர்கள் மூலம் ஆசிரியர்களுக்குப் பயிர்சி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆரம்ப கல்வி ஆலோசகர்களின் பெயர் விபரங்களை அனுப்புமாறு அமைச்சு யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

பெர்னான்டோ இந்தியக்கடற்படை மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது இவர் அண்மையில் பயணமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்தார்.

...றப்பட்டத் தளபதி தெரிவித்தார். [புலிகளின் கடற்படை அணி சிறிலங்காக்கடற்படைச் சிப்பாய்களைப் போல் சீருடை அணிந்து சிறிலங்கா கடற்பகுதியில் மீன் பிடிக்கும் இந்திய

(4ஆம் பக்கம் பார்க்க)

...டது.

இந்த ஊர்வலத்தில் 2,500 க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றினர். "உலக அரசியல் வரலாற்றில் மாணவர்கள் சமூகம் தோற்றதாக வரலாறு இல்லை", மாணவர் பாசறை

...மீதான கோழைத்தனமான தாக்குதலைநிறுத்து" போன்ற கோஷங்கள் ஊர்வலத்தில் சென்ற மாணவர்களால் கோஷிக்கப்பட்டன.

பழுகாமம் கண்டுவெளி மகா வித்தியாலயம், விபுலானந்த வித்தியாலயம், அம்பிலாந்துறை கலைமகள் வித்தியாலயம், கழுவந்தன்வெளி அரச தமிழ்க்கலவன் பாடசாலை, திக்கோடை கணேச வித்தியாலயம், 38 ஆம் கிராமப் பாடசாலை, தும்பங்கேணி பாட...

...விட்டன. சுற்றிவளைப்பு தேடுதல்நடவடிக்கைகளின் போது மாணவர்கள் கைது செய்யப்படுகின்றனர். விசாரணைக்குட்படுத்தப் படுகின்றனர். கைது செய்யப்பட்ட பலரின் விபரங்களே தெரியாதுள்ளன. மேலும் வடக்கு -கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளின்போதும் விமானக்குண்டு வீச்சுக்களின்போதும் பலநூற்றுக்கணக்கான மாணவர்கள் இறந்துள்ளனர். அத்துடன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பௌத்த குழு யாழ். வர புலிகள் அனுமதி

(யாழ்ப்பணம்)

நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ள பௌத்த பிக்குகளுக்கு விடுதலைப் புலிகள் அனுமதியளித்துள்ளதாகத் தெரிய வருகின்றது. இதே வேளை, பிலப்பிட்டிய அமரபுர சித்தார்த்த தேரோ தலைமையிலான பதின்மரைக் கொண்ட பௌத்த குருமாரின் யாழ்ப்பாண விஜயம் திட்டமிட்டபடி இம்மாத நடுப்பகுதியில் நடைபெறும் என்றும், இதற்கானஏற்பாடுகள் இப்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்படுவதாகவும் சிறிலங்கா மகாஜன பிக்குமார் சங்கத்தைச் சேர்ந்த பண்டித மாதம்பாகம அஸிஜி தேரோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன் கிழமை இத்னைத் தெரிவித்த அஸிஜிதேரோ சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி பிரயாண ஏற்பாடுகளை செய்து வருகிறது. இம் மாதம் 15ஆம் திகதி அளவில் யாழ்ப்பாணம் புறப்படுவதற்குத் தயாராக இருக்குமாறு எங்களைக் கேட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

'எங்களைப் பொறுத்த மட்டில் தமிழ்-சிங்கள புது வருடத்தை அங்குள்ள தமிழ் மக்களுடன் கொண்டாடவே விரும்புகின்றோம் எனவே ஏப்ரல் 10 ஆம் திகதியன்று எமது இந்த நல்லெண்ணப் பயணத்தை மேற்கொள்ளக் கூடியதாக பிரயாண ஏற்பாடுகளைச் செய்யுமாறு நாம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரைக் கேட்டுள்ளோம் இதற்குச் சாதகமான பதில் கிடைத்தால் 10 ஆம் திகதியன்றே யாழ்ப்பாணம் புறப்படுவோம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

# மணலாறு காடுகளில் தாக்குதல்முடிந்துவிட்டதாம்

இலங்கையில் வடபகுதியில் முக்கியமான புலிகளின் காட்டு முகாம் ஒன்றின் மீது சிறிலங்காத் தரைப்படை, விமானப்படைத் தாக்குதல்கள் எல்லாம் முடிந்து விட்டன. குறிக்கோள் கை கூடிவிட்டது என்று சிறிலங்கா இராணுவத் துறை அதிகாரி ஒருவர் தகவல் தந்திருப்பதாக பி.பி.ஸி. அறிவித்தது.

இலங்கையில் வடபகுதியில் முல்லைத்தீவுக் காட்டுப் பகுதிதியில் உள்ள முகாம் மீதான தாக்குதலையே அந்த இராணு அதிகாரி குறிப்பிட்டிருக்கிறார் என்று கணக்கெடுத்துக்கொள்ளலாம்என்றும்தெரிவிக்கிறது.

# கப்பலில் சென்ற நோயாளி வழியில் மரணமானார்

[யாழ்ப்பாணம்]

யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து குமண கப்பல் மூலம் திருக்கோணமலை சென்று அங்கிருந்து கொழும்பு செல்ல இருந்த நோயாளி ஒருவர் நேற்று கப்பலிலேயே மரணமானார். மேலும் இவரது சடலம் திருக்கோணமலைஅரசினர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அறிவித்துள்ளது.

# 100 தமிழ்ச் சிறுவர்களை பிக்குகள் ஆக்க வேண்டும்

## பிரேமதாசாவிடம் பிக்குகள் சங்கக் கோரிக்கை

(கொழும்பு)

பௌத்தமதம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட 2300 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு பொஸன் தினத்தன்று 2300 சிறுவர்கள் இளம் பிக்குகளாகச் சேர்த்துக் கொள்ளப்படும் போது அவர்களிடையே நூறு தமிழ் சிறுவர்கள் இடம்பெறச் செய்யப்பட வேண்டுமென இலங்கை மக்கள் பிக்குமார் சங்கம் சிறிலங்கா ஜனாதிபதியை கோரியிருக்கிறது.

சங்கத்தின் பிரதம செயலாளரான பண்டித மாதம் பாகம அஸிஜி தேரோ பௌத்த சாசனங்களுக்குப் பொறுப்பாக இருக்கும் பிரேமதாசாவிற்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

வடக்கு - கிழக்கில் பௌத்த விகாரைகள் பல தமிழ் தீவிர வாதிகளால் அழிக்கப்பட்டுள்ளன என்றும், அந்த விகாரைகளுக்கு பொறுப்பாக இருந்த தெற்கில் இருந்து சென்ற பிக்குமார் அப்பகுதிகளைச் சேர்ந்த தமிழ் சிறுவர்களை இளம் பிக்குகளாகச் சேர்த்துக் கொள்ள முன்வராமையே இன்றையநிலைமைக்கானகாரணமாகும்.

எனவே நூறு தமிழ் சிறுவர்களை இளம் பிக்குகளாகச் சேர்த்துக்கொள்ள பௌத்த சாசன அமைச்சுக்கு உதவ நாம் தயாராக இருக்கிறோம் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தியாகச் சுடர்அன்னை பூபதி நினைவுநாள் நிகழ்வுகள்

தியாகச் சுடர் அன்னை பூபதியின் நினைவாக நல்லூர் வட்டவைப் பிரிவில் இன்று கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலில் அடையாள உண்ணாவிரதமும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெறவுள்ளது.

உண்ணாவிரதம் காலை8-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை இடம்பெறும். இரவு 7-00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் ஆரம்பமாகும்.

இந்த நினைவஞ்சலிக் கூட்டத்தில் நெடுங்கீரன், அன்பரசி கடாபி மாஸ்ரர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.

இதனைத்தொடர்ந்துசின்னமணி வில்லிசைக் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

## வரி விளம்பரம்


**ENGLISH GRAMMAR SPOKEN ENGLISH**

சகல பரீட்சைகளுக்கும் ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது ஆங்கிலத்திற் பேசவும கற்பிக்கப்படுகிறது. ஆங்கிலம் முதலிருந்து கற்பிக்கப்படும். *V. N KANDASAMY A.I.B Part-I (LONDON) INTER (LONDON)* 87, திருநெல்வேலி றோட். (பாலத்திற்கு அண்மையில்) கொக்குவில் (2409)


### பின் போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்றுபிற்பகல் 4.00மணிக்கு தமிழீழ ஆய்வுநிறுவன தலைமைப்பணிமனையில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆய்வரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்' என்ற நூலின் அறிமுகமும்,ஆய்வரங்கமும் நாளை ஞாயிற்றுக்கிழமை கொக்குவில்இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த விழாவிற்கு அனைவரையும் பங்குபற்றுமாறு சாளரம் வெளியீட்டகம் கேட்டுள்ளது.

### வாராந்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை 5. 4. 92 காலை 10 00 மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக் கழக தலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இவ்வாரக் கருத்தரங்கில் செம்பியன் செல்வன் அவர்கள் '' எனது கலை இலக்கிய அனுபவங்கள்'' எனும் பொருளில் கருத்துரையாற்ற உள்ளார்.

### ஒத்துழைக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பமாக உள்ளன. எனவே விடுமுறையில் நிற்கும் கலைப்பீட, மருத்துவபீட மாணவர்கள் அந்தந்த நிலையங்களுக்கு சென்று தம்மை அடையாளங்காட்டி விடைத்தாள்கள் திரு


பாடம் : **பௌதிகவியல்**

அலகு : ஒளியியல் (93)

ஆசிரியர்: திரு. வர்ணம்

திகதி : 05 - 04 - 92

நேரம் : நண்பகல் 12.00 — 1.00

இடம் : **யூனிவேர்சல்**

கந்தர்மடம் (சி/4214)

பாடம்: **தாவரவியல்**

அலகு: தாவர உடற்றொழிலியல் (93)

ஆசிரியர்: திரு. ஐங்கரநேசன்

திகதி:- 5- 4- 92

நேரம்:- பி, ப. 5. 30 - 6. 30

இடம்:- **யூனிவேர்சல்**

கந்தர்மடம் (சி/4215)

பாடம்:- **விலங்கியல்**

அலகுகள்:- 1) தொகுதிகள் (93)

2) பொருளாதார விலங்கியல் (92)

ஆசிரியர்:- திரு. நாகநாதன்

திகதி:- 5-4-92

நேரம்:- 1) 1. 30 - 2. 30 (93)

2) 5. 30 - 6. 30 (92)

இடம்:- **யூனிவேர்சல்**

கந்தர்மடம் (சி/4216)

பாடம்:- **இரசாயனவியல்**

அலகுகள்:- 1) இரசாயன சமநிலை- (92)

2) செறிவும் பீசுமானமும் (அடிப்படை இரசாயனம்) (93)

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி

**மாணவர்களைப் பதிவு செய்தல்**

**1992/93**

※ கலைமாணி *B. A.*

※ விஞ்ஞானமாணி *B. Sc* (புள்ளி விபரவியல்)

க. பொ. த உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் அல்லது.

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பதிவு செய்து கொள்ளலாம். விபரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் எம்மிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுத் திகதி (10. 4. 1992.)**

விபரங்களுக்கு:-

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்

வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கென இயங்கும் ஒரே ஒரு நிறுவனம் யாழ்நகரில் இது' (சி4219)

இலங்கை செஞ்சிலுவைச்சங்கம்

யாழ்கிளை தலைமையலுவலகம்

**பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

அ. கிளை திட்டமிடல் அதிகாரி - முதலுதவி.

ஆ. கிளை திட்டமிடல் அதிகாரி - அனர்த்தங்களுக்கு ஆயத்தப்படுத்துதல்

இ. கிளை திட்டமிடல் அதிகாரி - கிளை அபிவிருத்தி

ஈ. கிளை திட்டமிடல் அதிகாரி - இளைஞர் சேவை

மேற்கூறிய பதவிகளுக்கு தகுந்த கல்வித்தகைமையும் அனுபவமும், ஆற்றலும், மாவட்டமட்டத்தில் சேவை செய்யும் ஆர்வமும் உள்ளோர் விரும்பப்படுவர். இதனுடன் தட்டெழுத்து அனுபவம் மேலதிக தகைமையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்கள் 15-04-92 க்கு முன்பாக தலைமைச் செயலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். 20-04-92 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். தனித் தனிக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

க. சிவானந்தராசா

கௌரவ செயலாளர்

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/4213)
2-4-92

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி

**விரிவுரை கலைமாணி [இறுதிவருடம்]**

**1993 ஏப்ரல்**

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள்

11 . 4 - 92இல் ஆரம்பமாகின்றன


## 8,000 பட்டதாரிகளுக்கு வேலை வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வேலையற்ற 8000 பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அரசாங்க துறையிலும் தனியார் துறையிலும் இந்தவேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். தொழில் திறமைகளை பெறும் வகையில் வேலை அனுபவங்களை பெறுவதற்கென கொள்கைத் திட்டமிடல் அமைச்சு வேலையற்ற பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இதற்கு 8,000பட்டதாரிகள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 2000 பேருக்கு அரசாங்கத் துறையிலும், மிகுதி 6000 பேருக்கு தனியார் துறையிலும் பயிற்சியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. பயிற்சிக் காலத்தில் சம்பந்தப்பட்டநிறுவனம் ரூபா 2,500க்கு குறையாத தொகையை கொடுப்பனவாக வழங்கும்.

வேலைவாய்ப்பை பெற்றுக் கொடுக்க ஆர்வமாகவுள்ள நிறுவனங்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களுக்கு வேலை வாய்ப்பைத் தேடிக் கொடுப்பதற்கு கட்டணமொன்றை அரசாங்கம் வழங்குமென அவர் மேலும் தெரிவித்தார்.

### சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா

(முல்லைத்தீவு)

தண்ணீரூற்று ஊற்றங்கரை ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானத்தின் முல்லை மாவட்ட முதல் சிற்பத்தேர் வெள்ளோட்ட விழா இன்று சனிக்கிழமை (4-4-92) பிற்பகல் 3 09 முதல் 4.39 வரையுள்ள நேரத்தில் நடைபெற உள்ளது

அன்றையதினம் காலை 9.00 மணிக்கு விநாயகப் பெருமானுக்கு சங்காபிஷேகமும் பஞ்சமுக விநாயகர் கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளது

### 86 நோயாளர் கொழும்பு சென்றனர்

குமண கப்பல் நேற்று முன்தினம்நோயாளர்களை ஏற்றிக் கொண்டு திருமலை திரும்பியது மேலும் 84 நோயாளிகள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம்வந்துசேர்ந்தனர் இவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க வாகனத்தில் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர் என்றும்தெரியவருகிறது. (75,பா

## நினைவு கூருகின்றோம்...

**1992. 04. 04**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய

★ **ராசன்**

1987ஆம் ஆண்டு கிளிநொச்சி வட்டக்கச்சிப்பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

**கனியூட்** (அந்தோனி தேவராசா - முதலைக்குத்தி உயிலங்குளம், மன்னார்)

1989ஆம் ஆண்டு மன்னார் / வெள்ளாங்குளம் பாலியாற்றுப்பகுதியில் சிற்றூர்தி ஒன்றினை வழிமடக்கி கொள்ளையில் ஈடுபட்ட தேசவிரோத சக்திகளினால் காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

**ராஜ்குயின்** (யோசப் அன்ரன் பெர்னாண்டோ- பனங்கட்டிக்கொட்டு, மன்னார்)

1991ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். இளங்கோ** (இராமநாதன் சகாதேவன்- சாம்பல் தீவு, திருக்கோணமலை)

மன்னார் நானாட்டான் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். பார்க்குகன்** (ஆ. நிக்சன்-நானாட்டான்

(யாழ்ப்பாணம்)

அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி இன்று ஆரம்பமாக உள்ளன. எனவே விடுமுறையில் நிற்கும் கலைப்பீட, மருத்துவபீட மாணவர்கள் அந்தந்த நிலையங்களுக்கு சென்று தம்மை அடையாளங்காட்டி விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஈடுபடுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

## புனர்வாழ்வு ஆலோசனைக் கூட்டம்

(கொழும்பு)

தேசிய புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணத்துக்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் நடைபெற உள்ளது.

கொழும்பில் தங்கியிருக்கும் யாழ்.அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கிறார். யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய அத்தியாவசிய புனர்நிர்மாண, புனர்வாழ்வுப் பணிகள் குறித்து யாழ்.அரச அதிபர் இக் கூட்டத்தில் பிரஸ்தாபிப்பார் ஏனைய மாவட்டங்களின் அரச அதிபர்களும் புனர்வாழ்வு அமைச்சின் உயர் அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## மாட்டுதொழுவத்தில் குடியிருப்பு

(ஹற்றன்)

நமுனு கலையைச் சேர்ந்த கனவரல்ல தோட்டத் தொழிலாளர்கள் பலர் மாட்டுத் தொழுவத்தில் குடியிருக்கின்றார்களென தெரிவிக்கப்படுகிறது.

இந்த நூற்றாண்டு நவீன முறைக் காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மாட்டுத் தொழுவத்தில் குடியிருப்பதால் பல நோய்களுக்கு ஆளாவதுடன் தொற்று நோய்களும் பரவுகின்றன என்றும், தெரிவிக்கப்படுகிறது.

---

பாடம்:- **இரசாயனவியல்**

அலகுகள்:- 1) இரசாயன சமநிலை- (92)

2) செறிவும் பீசுமானமும் (அடிப்படை இரசாயனம்) (93)

ஆசிரியர்:- திரு. செல்வா

திகதி:- 5. 4. 92

நேரம்:- 1) 3. 30 — 4. 30 (92)

2) 2. 30 — 3. 30 (93)

இடம்:- **யூனிவேர்சல்**

கந்தர்மடம்

(சி. 4217)

---

பாடம்:- **இரசாயனவியல்**

அலகுகள் 1) பொது இரசாயனம் (93)

2) சேதனஇரசாயனம் (92)

3) பௌதிக இரசாயனம் (இரசாயன சமநிலை) (92)

ஆசிரியர்:- திரு. மகாதேவா

திகதி: 5. 4. 92

நேரம்: 1) செவ்வாய், வியாழன் (விடுமுறை கால வகுப்பு) 4. 30 — 5. 30 (93)

2) சனி, ஞாயிறு 1 — 2 (92)

3) செவ்வாய், வியாழன் 8. 30 — 9. 30 (92)

இடம்: **யூனிவேர்சல்**

கந்தர்மடம்

நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட்

திருநெல்வேலி

(சி/4218)

---

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரி

**விரிவுரை கலைமாணி [இறுதிவருடம்]**

## 1993 ஏப்ரல்

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள் 11 - 4 - 92இல் ஆரம்பமாகின்றன

அண்மையில் வெளிவந்த பரீட்சை முடிவுகளில் சித்தியடைந்த மாணவர்களில் எமது கல்லூரியில் கல்விபயின்ற மாணவர்களே அதி திறமைச் சித்திகளுடன் சித்தியடைந்துள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேன்.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூரி

148/1 ஸ்ரான்லி வீதி

யாழ்ப்பாணம்

(சி - 4220)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

| தாயின் மடியில் | | தாயக மீட்பில் |
|---|---|---|
| 07 — 04 — 1972 |  | 04 — 04 — 1991 |

**லெப்டினன்ட் பார்க்குகன்**

**(ஆரோக்கியம் நிக்சன்)**

நானாட்டான் மன்னார்

புதிய சரித்திரம் படைத்திட
புலி வீரருள் ஒருவனாய் - எங்கள்
''பார்க்குகனும்,' புறப்பட்டான்,
பாரினில் தமிழீழம் என்றொரு நாடு படைத்திட,
ஆய்வு நிறுவனத்தின் மூலம் தமிழீழத்திற்காய்
ஆன மட்டும் தன் பணிகள் செய்தவன்
களம் காண்பதிலும் தன் பணி தொடர்ந்து - மன்னார்
களத்தினிலே மாவீரனாய் விட்டான்.

(சி/4221)

தமிழீழ ஆய்வுநிறுவனம்

---

1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எம்மைப் பிரிந்த

**ராஜ்குயின்** (யோசப் அன்ரன் பெர்னான்டோ- பனங்கட்டிக்கொட்டு, மன்னார்)

1991ஆம் ஆண்டு காரைநகரில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். இளங்கோ** (இராமநாதன் சகாதேவன்- சாம்பல்தீவு, திருக்கோணமலை)

மன்னார் நானாட்டான் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**லெப். பார்க்குகன்** (ஆ. நிக்சன்-நானாட்டான் மன்னார்)

**கோல்டின் / கோச்டிச்** (பா. கில்னறி பிறேம் ராஜ்- நறுவிலிக்குளம் வங்காலை, மன்னார்)

வவுனியா பம்பைமடுப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் ஜியாப்காந்தன்** (குமாரசாமி மகேஸ்வரன்- 134, புகழேந்திநகர், மல்லாவி)

**2ஆம் லெப். சியாந்தன்** (தெய்வேந்திரம் ரவிச்சந்திரன் - சாஸ்திரி கூழாங்குளம், வவுனியா)

**விக்ரர்** (அம்பலவாணர் சுரேஸ்குமார் - இறம்பைக்குளம், வவுனியா)

**பாலு** (அடைக்கலம் சுந்தரலிங்கம் - கண்டிவீதி சின்னக்குளம், வவுனியா)

**இருபன்** (சு சைமன் - பூவரசங்குளம், வவுனியா)

**தாமு** (பொன்னையா ஜெயராசா விளக்கு வைத்தகுளம், வவுனியா)

**கபில்தேவ்** (முருகேசு சிவபாலன் - சாஸ்திரிகூழாங்குளம், வவுனியா)

**சியா்த்** (ப. பரமேஸ்வரன்-கோழிபாகுளம், வவுனியா)

**முகுந்தன்** (சுப்பையா சசிகுமார்- உக்கியான்குளம் வவுனியா)

**தனேந்திரன்** (சுப்பையா பன்னீர்ச்செல்வம்-மாத்தளை)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**சிறிகாந்** (சின்னையா உதயராசா - மாணிக்கவளவு ஓமந்தை, வவுனியா)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய

**தீபன்** (சுப்பிரமணியம் சுகந்தகுமார் - வட்டுக்கோட்டை, கிழக்கு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மரவீரர் ராசன் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-4212)

## சிந்தனைக்கு

மலர்களைக் கண்டு விரிகின்ற இதயங்கள் தான் முட்களாலும் முதலில் கீறப்படும்.

— தாமஸ் மூர்


ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 04-04-1992

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308

த பெ எண் ..


# மீண்டும் ஒரு தவறு இந்தியா விடுமா?

விடுதலைப் புலிகளைத் தடை செய்வது குறித்து இந்திய மத்திய அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புலிகளைத் தடை செய்வது குறித்து மத்திய அமைச்சரவையின் அரசியல் விவகாரங்கள் சமிட்டி ஆராய்ந்து வருவதாக கடந்த வார இறுதியில் இந்திய அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்தார் இது தொடர்பான அறிவித்தல் சில தினங்களுக்குள் சிலவேளை இப்பகுதியை நீங்கள் வாசித்துக் கொண்டிருக்கும் போது வந்தும் இருக்கலாம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்து இன்றும் இந்தியாவில் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கம் போன்றே உள்ளது. இந்திய மண்ணிலோ அன்றி இந்தியக் கடற்பரப்பிலோ புலிகள் தற்பொழுது நடமாடுவதாகவும் இல்லை. நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுவதாகவும் இல்லை. விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தைக்கட்டுப்படுத்துவதற்கென தமிழகத்தில் பெருமளவில் படைகள் குவிக்கப்பட்டுள்ளதோடு தீவிரபாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளதோடு பாக்குநீரிணைப்பகுதியிலும் வங்காளவிரிகுடாப்பகுதியிலும் இந்தியக்கடற்படையின் தீவிர கண்காணிப்பும் இடம் பெற்று வருகிறது. ஆகையினால் இந்திய அரசாங்கம் தடை செய்வதினால் விடுதலைப் புலிகளைப் பொறுத்தோ அல்லது தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தோ பெரிய அளவினதான பாதிப்பு எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை. மேலும் சுமார் ஒரு வருடம் அளவில் இந்தியாவில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதும் தமிழீழ விடுதலைப்போராட்டம் பெருமளவு பாதிப்பிற்கு உள்ளானதாக இல்லை. அத்தோடு போராட்டம் ஆரம்பித்த காலத்தில் இருந்து இந்தியாவை நம்பி விடுதலைப் புலிகள் போராட்டம் நடத்தவில்லை என்பதும் சகலரும் அறிந்த உண்மை அவ்வாறில்லாவிடில் 1987 இல் இந்தியாவுடன் நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இறங்கியிருக்கமாட்டார்கள்.

இந் நிலையில் விடுதலைப் புலிகளை இந்தியா தடைசெய்வதென்பது விடுதலைப் புலிகளைப் பொறுத்து சில நெருடல்களை ஏற்படுத்துமே ஒழிய போராட்டத்தின் இன்றைய நிலையில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்திவிடப் போவதில்லை. அதாவது இந்தியாவின் இன்றைய அணுகுமுறையானது விடுதலைப் புலிகளின் விநியோகவழிகளைக் கட்டுப்படுத்துவதாகவும் விடுதலைப் புலிகளை ஓர் 'பயங்கரவாத அமைப்பு' என சர்வதேச ரீதியாகப் பிரச்சாரம் செய்து தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கான உலக ஆதரவை மழுங்கடித்தலுமேயாகும்.

ஆனால் விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்யுமானால் அது பிராந்திய அரசியலிலும் குறிப்பாக இலங்கை அரசியலில் இந்தியா மீண்டும் விடும் மாபெரும் இராஜதந்திரத் தவறாகவே அமையும்.

விடுதலைப் புலிகளைத் தடைசெய்வதின் மூலம் இந்தியாவில் கிளம்பியுள்ள கிளம்பவுள்ள தேசிய இனப் போராட்டங்களை இந்திய மத்திய அரசினால் ...

# பல்கலைக் கழகங்கள் விபுலானந்தரை மறந்ததேன்

(திருக்கோணமலை)

'மிகவும் ஆழமான பார்வையுடைய இருநூறுக்கும் அதிகமான ஆய்வுக கட்டுரைகளை சுவாமி விபுலானந்தர் எழுதியிருக்கின்றார் இவற்றை முறையாக ஆய்வுசெய்வதன் மூலமே அவரின் ஆளுமையை முழுமையாகவெளிக்கொணர முடியும். இதைச் செய்ய வல்லவை பல்கலைக்கழகங்களே என திருக்கோணமலை மேலதிக அரசாங்க அதிபர் என்.புவனேந்திரன் கூறினார்.

திருக்கோணமலை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற விபுலானந்தர் நூற்றாண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக ஒழுங்கு செய்யப்பட்ட ஆய்வரங்கில் தொகுப்புரை நிகழ்த்திய மேலதிக அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:-

சுவாமி விபுலானந்தரின் தமிழ்ப்பணி பல்கலைக்கழகங்களில ஆழமான வேர்களைக் கொண்டிருந்தன. சென்னை பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம், இலங்கை பல்கலைக்கழகம் ஆகிய மூன்றிலும் அடிகளார் நீண்ட காலம் பணியாற்றினார். பல பேராசிரியர்களை உருவாக்கியுள்ளார். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழையடி வாழையாக பல பேராசிரியர்கள் உருவாகி வருகிறார்கள். இவர்களை உருவாக்கும் பல்கலைக் கழகங்கள் சுவாமி விபுலானந்தரை மறந்து விட்டது ஏன்?

இனிமேலாவது இவைகள் விபுலானந்த அடிகளாரது ஆக்கங்களை முறையாக ஆய்வு செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும். உலக இலக்கியப் பரப்பில் அடிகளாரின் இடத்தை உறுதிசெய்ய வேண்டும். எனக் கேட்டுக் கொண்டார்.

## தண்ணீர் எடுப்பதற்கு பழனகமவில் நேரசூசி

பழனகம கிராமத்தில் கிணறுகளில் தண்ணீர் அள்ளுவதற்கு நேரசூசிகை தொங்கவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

பி.ப.5மணிமுதல் 5 30வரை அரைமணி நேரம் தண்ணீர் எடுக்கக் கிராம வாசிகள் அனுமதிக்கப் படுவார்கள் என்று கிணற்று உரிமையாளர் ஒருவர் நேரசூசிகையில் குறிப்பிட்டுள்ளார்.

தற்பொழுது நிலவும் கடும் வரட்சி காரணமாகவே இந்த நடவடிக்கை.

# பொலிஸ்கான்ஸ்டபிள்பதவி சி. வி. எவ். தகுதியில்லை

இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கைக்கு பின் அமைக்கப்பட்ட சி. வி. எவ். சிவில் தொண்டர் படையைச் சேர்ந்த பலர்பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்கு போதிய கல்வித் தகைமைகள் உயர்தரம் ஏனைய தகைமைகள் இல்லாத காரணத்தினால் நேர்முகப் பரீட்சையின் போது நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் வவுனியாவில் நடைபெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள் நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சையின் போது சி. வி. எவ்., சிவில் தொண்டர் படையில் கடமையாற்றிய பதினேழு பேர் சமுகமளித்தனர்.

ஆனால், ஆறுபேர் மட்டுமே இதில் தெரிவாகியுள்ளனர் என்றும், ஏனையோர் நிராகரிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கியில் குறிவைத்துச் சுடுவதில் நிபுணத்துவம் பெற்றவர்களும் நிராகரிக்கப்பட்டவர்களுள் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நிதிநிறுவனங்களிடம் நிதியைப் பெற

# சிறிலங்கா அரசாங்கத்தின் புதியபிரச்சார யுக்தி

வெளிநாடுகளிடம் இருந்தும் சர்வதேச நிதிநிறுவனங்கள் மற்றும் தொண்டர் ஸ்தாபனங்களிடமிருந்தும் நிதி உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிறிலங்கா அரசு புதிய யுத்திகளைக் கையாண்டு வருகிறது

புனர்நிர்மாண, புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கென மேற்படி நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட நிதி உதவிகள் வடக்கு கிழக்குப்பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகிறது என்பதை வெளிக்காட்டிக்கொள்ள அரசு முயற்சி செய்து வருகிறது இம்முயற்சி மூலம் பெற்றுக்கொள்ளும் நிதி உதவிகள் அனைத்தும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமமாகப்பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மேற்படி நிறுவனங்களுக்கு உணர்த்துவதற்கு பகீரதப்பிரயத்தனம் செய்து வருகிறது.

இதற்காக உண்மைக்குப் புறம்பான வகையில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடுதல் மற்றும் இது போன்ற பிரச்சார நடவடிக்கைகளைஅரசு முடுக்கு விட்டிருக்கிறது.

ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வடக்கு கிழக்கின் குறுகிய பகுதியில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மட்டுமே மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த புனர்வாழ்வு வேலைகளை உதாரணம் காட்டி, வடக்கு கிழக்கு முழுவதும் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகசெய்யப்படும் பிரச்சாரம் குறித்து வடபகுதி அரச உயர் அதிகாரிகள் கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளனர். (ஈ

# ஐ.நா. தீர்மானத்தைஎதிர்த்து லிபியாவில் ஆர்ப்பாட்டம்

## —வெனிசூலா, ரஷ்யா தூதரகங்கள் சூறை

(திரிபோலி)

லிபியாவின் மீது பொருளாதாரத் தடை விதிக்கும் ஐ நா. பாதுகாப்பு சபையின் தீர்மானததிற்கு எதிராக நேற்றுமுன்தினம் திரிபோலியில் பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றுளளன.

ஆர்ப்பாட்டக்காரர்கள், வெனிசூலா மற்றும் ரஷ்யா நாடுகளின் தூதுவரசங்களினுள் புகுந்து சூறையாடியது டன் தீயிடடும் மகாளுத்தியுள்ளனர் அத்துடன் ஐ. நா. பாதுகாப்பு சபையின் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுடன் ராஜதந்திர உறவுகளை லிபியா துண்டித்து விட வேண்டுமென்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

லிபியாவுக்கு எதிரான தடை விதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது பாதுகாப்பு சபையின் தலைமைப் பதவியை வகித்த வெனிசூலா நாட்டுத் தூதுவரகம், லிபியாவில் அமெரிக்க நலன்களைக் கவனிக்கும் பெல்ஜியத் தூதுவரகம், பிரிட்டன் விவகாரங்களைக் கவனிக்கும் இத்தாலிய தூதுவரகம் ஆகியவற்றின் முன்பாகவும் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. பிரான்சுத் தூதுவரகத்தினுள் புக முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களை லிபியப் பாதுகாப்பு படையினர் தடுத்து விட்டனர்.

இதேவேளை, லிபியாவிலுள்ள தூதுவரகங்களைப் பாதுகாக்க லிபியப் பொலிசார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள போதிலும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளிநாட்டுத் தூதுவர்கள் அனைவரையும் தூதரகங்களை விட்டு வெளியேறுமாறு லிபிய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனிடையே லிபியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் ...

### லிபியா மீதான

## ஐ. நா. தீர்மானம் அரபு லீக் அதிருப்தி

(கெய்ரோ)

### கால்களை இழந்த சிறுமிக்கு

# பிரான்ஸ் சிறுவர் நலன்காக்கும் பிரிவு உதவி

[பருத்தித்துறை]

1990 யூன் 16 ஆம் திகதி வடமராட்சி கிழக்கு குடத்தனையில் சிறிலங்கா பாதுகாப்புப் படையினரால் மேற்கொள்ளப்பட்ட ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் இரு கால்களையும் இழந்த சிறுமியான செல்வி கார்மலாலசகரசிக்கு பிரான்ஸ் சிறுவர் நலன் காக்கும் பிரிவு சுமார் 10,000 ரூபா செலவில் ஜெயப்பூர் செயற்கைக் கால்களைப் பொருத்தியுள்ளது.

ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் இச் சிறுமி இவரது தாயார், சகோதரன் ஆகியோர்காயமடைந்திருந்தனர். இவர்களில் இச் சிறுமியின் கால்கள் இரண்டும் பிரான்ஸ் வைத்திய சேவைக்குழுவினரால் அகற்றப்பட்டது. இவ் வைத்தியசாலையில் பணியாற்றிய பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இயக்குநர் டாக்டர் கிறிஸ்தியன் பிரான்ஸ் சென்று பிரான்ஸ்சிறுவர்நலன்காக்கும் பிரிவுடன் தொடர்பு கொண்டு இச்சிறுமிக்கான உதவிகளுக்கு நடவடிக்கைகளை மேற் கொண்டிருந்தார். இதனைத் தொடர்ந்து பிரான்ஸ் சிறுவர் நலன்காக்கும் பிரிவின் உத்தரவையடுத்து காயமடைந்து கால்களை இழந்த இச்சிறுமியை பிரான்ஸ் வைத்திய சேவைக் குழுவினர் பொறுப்பேற்று சுமார் ஒருமாதகாலம் பராமரித்து ஜெயப்பூர் கால்களான செயற்கைக்கால்களைப் பொருத்தி யுள்ளனர் செயற்கைக் கால்கள் பொருத்தப்பட்ட இச்சிறுமி கடந்தவாரம் வீடுவந்து சேர்ந்துள்ளார். இவரது குடும்பத்தினர் பிரான்ஸ் சிறுவர் நலன்காக்கும் பிரிவுக்கும், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பிரான்ஸ் வைத்தியசேவைக் குழுவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

(25

மழுங்கடித்தலுமேயாகும்.

ஆனால் விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்யுமானால் அது பிராந்திய அரசியலிலும் குறிப்பாக இலங்கை அரசியலில் இந்தியா மீண்டும் விடும் மாபெரும் இராஜதந்திரத் தவறாகவே அமையும்.

விடுதலைப் புலிகளைதடைசெய்வதி னால்இந்தியாவில் கிளம்பியுள்ள கிளம்பவுள்ள தேசிய இனப் போராட்டங்களை இந்திய மத்திய அரசினாலோ அன்றி மாநில அரசுகளினாலோ தடுத்து விட முடியாது. விடுதலைப் புலிகளின் தேசிய இனப் போராட்ட வரலாறு தென்னாசியாவில் அடக்கப்பட்ட தேசிய இனங்களின் போராட்டங்களுக்கு ஓர் முன்மாதிரியாகும். தொலைத்தொடர்பு சாதனங்களும், வெகுசனத் தொடர்பு சாதனங்களும் மலிந்து போயுள்ள இன்றைய நிலையில் இந்திய மத்திய அரசு விரும்பியது போன்று இயக்கங்களைத் தடை செய்வதன் மூலம் கருத்துக்கள் சென்றடைவதைத் தடுத்து விட முடியாது. சிலவேளை விடுதலைப் புலிகள் பற்றிய செய்திகள் மட்டும் தான் தடுத்து விட முடியுமாயினும் பனிப்போர் முடிவிற்கு பின்னர் உலகின் பலபாகங்களிலும் முனைப்பாக எழும்பியுள்ள தேசிய இனங்களின் போராட்டங்களை எவ்வாறு இந்திய அரசால் மறைத்துவிட முடியும்?

இதேவேளை விடுதலைப் புலிகளை தடைசெய்வதென்பது இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இருந்து ஒதுங்கியதாகவே முடியும். அண்மையில் அமைச்சர் தொண்டமான் கூறியது போன்று 'யார் விரும்பினாலோ விரும்பா விட்டால் என்னவோ, தமிழரின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விற்கு விடுதலைப் புலிகளுடன் பேசியே ஆக வேண்டும்.' அத்தோடு கடந்த காலத்தில் இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழ் மக்கள் தொடர்பாகஎடுத்தநடவடிக்கைகளாலும்,நடந்துகொண்டவிதத்தினாலும் இந்திய இலங்கைத் தமிழ் மக்களிடம் இருந்து அந்நியப்பட்டுப் போயுள்ளது இந்நிலையில் மேலும் ஒரு தடை உத்தரவைப் போடுவதனால் நட்டமடையப் போவது இந்தியாவே ஒழிய புலிகளோ அன்றி தமிழ் மக்களாகவோ இருக்க முடியாது.

மேலும் இந்தியா, என்ன தான் விரும்பினாலும், விட்டுக்கொடுத்து நடந்தாலும் பௌத்த சிங்களப் பேரினவாதம் இந்தியாவை நண்பனாக ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இதனை சிறிலங்கா அரசாங்கத்தின் நடவடிக்கையில் இருந்தே புரிந்து கொள்ளலாம். தமிழருக்குத் துரோகம் விளைவித்ததோடு தனது பொருளையும் இராணுவத்தினரின் உயிரையும் இந்தியா சிறிலங்காவிற்காகக் கொடுத்த போதும் சிறிலங்கா நன்றியுடையதாக இருக்கவில்லை மேலும் தற்பொழுது தேயிலைத் தோட்டங்களின் நிர்வாகத்தை கம்பனிகளுக்கு வழங்கத் தீர்மானித்துள்ள சிறிலங்கா அரசாங்கம், இந்தியக் கம்பனிகளுக்கு வழங்கத் தயாராக இல்லை என்பதில் இருந்தும் விளங்கிக் கொள்ளலாம்.

இவ்வாறான சூழ்நிலையில் இந்திய மத்திய அரசாங்கம் விடுதலைப புலிகளைத் தடை செய்வது என்டது தமிழீழ மக்களிடம் இருந்து இந்தியா மேலும் அந்நியப்படுவதற்கும், தென்னாசிய அரசியலில் மேலும் ஒரு தவறு விடுவதாகவும் அமையுமே ஒழிய அவர்கள் எண்ணுவது போல் தமிழர் போராட்டத்தை சிதைத்து விட முடியாது. ஆகையால், புலிகளைத்தடை செய்தல் விவகாரம் என்பதில் இந்தியா உணர்ச்சி பூர்வமான முடிவிற்குச்செல்லாமல்,சிந்தித்துச் செயற்படுதல் நல்லது.

# ஐ. நா. தீர்மானம் அரபு லீக் அதிருப்தி

(கெய்ரோ)

ஐ நா. பாதுகாப்பு சபை லிபியா மீது தடை உத்தரவு விதித்ததற்கு அரபு லீக் நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

அரபு லீக்கின் சார்பாகப் பத்திரிகையாளர்களிடம்பேசிய பிரதிப்பொதுச் செயலளர் அட்னான் ஒர்ரான் மேலும் கூறுகையில், லிபிய பிரச்சனை ஐ நா. சாசனத்தின் 33-ஆவது பிரிவின் கீழ் பேச்சுவார்த்தைகள் சமாசம் ஆகியவற்றின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் அமெரிக்காவின் நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலும் பாதுகாப்பு சபை அங்கத்துவ நாடுகளில் மூன்றில் ஒரு பங்கினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர் என்றும் சர்வதேச நீதி மன்றத்தின் தீர்ப்பு வழங்கப்படும் வரை அமெரிக்காவும், சக நாடுகளும் தமது நடவடிக்கைகளைத் தாமதப்படுத்தியிருக்கலாமெனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஐ நா. சபையின் 242, மற்றும் 33-ஆவது இலக்க தீர்மானங்களை மீறிச் செயற்பட்டு வரும் இஸ்ரேல் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஐ நா சாசனத்தின் ஏழாவது அத்தியாயத்தில் இடமிருந்த போதும் அதனைச் செயற்படுத்தவில்லை எனவும் சுட்டிக் காட்டினார்.

# ஒலிம்பிக் போட்டியாளரை குறைக்கவேண்டிய நிலை

(மட்றிட்)

பார்ஸிலோனாஒலிம்பிக்ஏற்பாட்டாளர்கள் போட்டியில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் பிரச்சினையை எதிர்நோக்கி இருப்பதாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி டைரக்டர் ஜெனரல் கூறினார்.

10,000 விளையாட்டு வீரர்களையும், 5000 அதிகாரிகளையும் கொண்டதாக எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் பாரதூரமான பிரச்சினை இருப்பதாக அவர் கூறினார்.

## ஜேர்மனியில்

# பாது. அமைச்சர் பதவிதுறப்பு டாங்கிவிற்பனையால் சர்ச்சை

(பெர்லின்)

ஜேர்மனியின் பாதுகாப்பு அமைச்சர் கேகார்ட் ஸ்ரசன்பேர்க் நேற்று முன்தினம் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார். ஜேர்மன் பாராளுமன்றம் விதித்த தடையை மீறி துருக்கிக்கு பதினைந்து யுத்த டாங்கிகள் விற்பனை செய்தமை தொடர்பாக எழுந்த சர்ச்சையை அடுத்து அவர் தமது பதவியைத் துறந்துள்ளார். எனினும் ஜேர்மன் அதிபர் கெல்மட் ஹோல் தொடர்ந்தும் முன்னாள் பாதுகாப்பு அமைச்சருக்கு ஆதரவளிப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இருந்தபோதிலும் அரசாங்கத்திற்கும், ஆளும் கிறிஸ்தவ ஜனநாயக கட்சிக்கும் அபகீர்த்தி ஏற்படுவதை தடுக்கும் நோக்கத்துடனேயே அவர் பதவி துறந்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

களை விட்டு வெளியேறுமாறு லிபிய அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனிடையே லிபியாவுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தடை விதித்துள்ளதையடுத்து லிபியா ஐரோப்பிய நாடுகளுக்கு எண்ணெய் விற்பதை தடை செய்ய வேண்டி வரும் என்று லிபிய அதிபர் கேணல் கடாபி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால் லிபியா எண்ணெய் விற்பனையை தடை செய்யும் முன்பாக உலக நாடுகள் லிபியாவிடமிருந்து எதையும் கொள்வனவு செய்யக் கூடாது என்று புதிய தடை ஒன்றை விதிப்பது பற்றி ஆராய்ந்து வருவதாக அமெரிக்க தரப்பில் கூறப்படுகின்றது

அகற்றப்பட்டது. இவ் வைத்தியசாலையில் பணியாற்றிய பிரான்ஸ் வைத்திய சேவைக் குழு இயக்குநர் டாக்டர் கிறிஸ்தியன் பிரான்ஸ் சென்று கும், பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை பிரான்ஸ் வைத்தியசேவைக் குழுவுக்கும் நன்றி தெரிவித்துள்ளனர்.

(25

# பொற்கோயில் வளாகத்தில் இந்தியப் பொலிசார்

(டில்லி)

பஞ்சாப்பில் சீக்கியர்களின் புனித ஸ்தலமாகிய பொற்கோயில் வளாகத்தில் பொலிஸார் நேற்றுமுன்தினம் புகுந்தனர்.

சீக்கியப்போராளிகள் பொற்கோயில் வளாகத்தில் மறைந்திருந்து தங்களது தீவிரவாத நடவடிக்கையை மேற்கொள்வதாகச் சந்தேகப்படுவதை அடுத்து பஞ்சாப்பொலிஸார் தேடுதலில் ஈடுபட்டனர்.

பொலிஸார் கோயில் வளாகத்தில் புகுந்து பக்தர்களைத் துன்புறுத்துவது தமது மத உணர்வைப் பாதிப்பதாகக் கோயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

1986 ஆம் ஆண்டு இந்திரா காந்தி ஆட்சிக்காலத்தில் நீல நட்சத்திரம் என்ற இராணுவ நடவடிக்கையில் இந்திய இராணுவம் முதன் முறையாகப் பொற்கோயிலுக்குள் நுழைந்தது குறிப்பிடத்தக்கது.

# அரசின் நாட்குறிப்பிலும் எம். ஜி. ஆர். புறக்கணிப்பு

## - திருநாவுக்கரசு குற்றச்சாட்டு

(சென்னை)

காலஞ்சென்ற முதலமைச்சர் எம் ஜி. ஆரின் பிரபலமான மேற்கோள் வாசகங்களை தமிழக அரசின் உத்தியோக பூர்வ டயரியில் சேர்க்காததை எம் ஜி ஆர். : அ. தி. மு. க. உறுப்பினர் எஸ். திருநாவுக்கரசு சட்டசபையில் கடந்த வாரம் கண்டித்ததையடுத்து காரசாரமான வாக்குவாதம் மூண்டது.

வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திருநாவுக்கரசு;

'டயரியைப் பார்த்ததும் அதைக் கிழித்து விடவே நான் விரும்பினேன் ஆனால் பின்னர் அது சரியல்ல என்று நினைத்தேன் சி என். அண்ணாத்துரை. ஈ. வே. இராமசாமி போன்ற ஏனைய தலைவர்களின் மேற்கோள்கள் டயரியில் இருக்கின்றன. நான்கு தசாப்த காலம் பொது வாழ்வில் ஈடுபட்ட எம். ஜி ஆர். பதினொரு வருடங்கள் முதலமைச்சராகவும் இருந்தார் எம் ஜி. ஆரின் பெயரையும் புகழையும் பயன்படுத்தியே இந்த அரசாங்கம் அதிகாரத்திற்கு வந்தது. உயிரோடிருக்கின்ற தலைவர்களாயினும் சரி இறந்த தலைவர்களாயினும் சரி அவர்கள் எல்லோரிலும் பார்க்க செல்வாக்கு மிக்கவராக எம். ஜி ஆரே திகழ்ந்தார் என்றும் திருநாவுக்கரசு கூறினார்.

திருநாவுக்கரசுவின் பேச்சை இடைநிறுத்திப் பேசிய சட்டத்துறை அமைச்சர் கே.ஏ. கிருஷ்ணசாமி; "இருபது வருடங்களுக்கு மேலாக நான் எம் ஜி ஆருடன் பழகியிருக்கிறேன். எம் ஜி. ஆருக்கு கீர்த்தி சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை முதலமைச்சர் ஜெயலலிதா எடுத்து வருகின்றார் எம் ஜி. ஆரின்உருவப்படத்தை சட்டசபையில் திரை நீக்கம் செய்து வைத்திருக்கிறார். ஒரு மாவட்டம் கூட எம். ஜி. ஆர். பெயரில் உருவாக்கப் பட்டிருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

அரசில் ஆதாயம் தேட திருநாவுக்கரசு முயற்சிப்பதாக குற்றஞ் சாட்டிய பொது வேலைகள் அமைச்சர் எஸ். கண்ணப்பன் எம் ஜி. ஆர்.சமாதியை மீளமைப்பு செய்ய முதலமைச்சர் உத்தரவிட்டிருக்கிறார் என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த திருநாவுக்கரசு அடுத்த வருட டயரியில் ஆவது எம். ஜி. ஆரின் மேற்கோள்களை சேர்க்குமாறு மாத்திரமே தான் கேட்டதாக கூறினார்.

# ஈழநாதம்

பண்டா - செல்வா ஒப்பந்தம்;

## ஐ. தே. கட்சி ஏற்றிருந்தால் இனப்பிரச்சினை தீர்ந்திருக்கும்

### எஸ். டி. பண்டாரநாயக்கா

[கொழும்பு]

1958 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்தை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டிருக்குமேயானால் இன்று இனப்பிரச்சினை என்பதே இருந்திருக்காது பதிலுக்கு அமைதியும் நல்லிணக்க சூழலும் நிலவியிருக்கும் என்று எஸ் டி. பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

சோசலிச மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. எஸ் டி. பண்டாரநாயக்கா விடுத்த அறிக்கையொன்றில் மேலும் 1956 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலின் போது பாராளுமன்றத்தில் எட்டு ஆசனங்களை மட்டுமே பெற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்ததன் மூலம் பிரித்தானியர் 1948 இல் விட்டுச் சென்ற வெஸ்ட் மினிஸ்டர் முறையிலான பிரித்தாளும் சூழ்ச்சிக்கு பலியாகியது என்றும்,

1505 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 1956 ஆம் ஆண்டில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவினால் தான் சிங்களம் அரசகரும மொழியாக்கப்பட்டது என்றும், ஆங்கிலத்திற்கு பதிலாக சுயபாஷையை உத்தியோகபூர்வ மொழியாக்கும் திட்டத்தின் கீழேயே எஸ். டபிள்யூ. ஆர். டி. செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய முன்வந்தார் என்றும் குறிப்பிட்டு உள்ளார்.

## ராஜீவிற்கான அச்சுறுத்தல்; வாழப்பாடி அறிந்திருந்தார்

### கமிசன் வர்மா தெரிவிப்பு

உயர் பொலிஸ் அதிகாரிகளும் மற்றும் மூத்த இந்திரா காங்கிரஸ் தலைவர்களான திருமதி மரகதம் சந்திரசேகரம், வாழப்பாடி கே. இராமமூர்த்தி ஆகியோர் ராஜீவ் காந்தி உயிருக்கு அச்சுறுத்தல் இருந்ததை அறிந்திருந்தார்கள். இவ்வாறு ராஜீவ் கொலை தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் தலைவர் ஜே. எஸ். வர்மா தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் ஆணைக்குழுவின் அமர்வின் போது நீதியரசர் ஜே எஸ். வர்மா இவ்வாறு கூறினார்.

தமிழீழத்தை அங்கீகரிக்கக் கோரி

## சாகும்வரைஉண்ணாவிரதம் தமிழக இளைஞர் கைது

தனித்திராவிட நாடு வேண்டும் என்றும் தமிழீழத்தை அங்கிகரிக்கக் கோரியும் சாகும் வரை உண்ணா விரதம் இருந்தவர் கைது செய்யப்பட்டார்

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் (வயது35) கோவை மாவட்ட ஆட்சி அலுவலகம் முன்னால்; சாகும் வரை உண்ணாவிரதமிருந்தார். இவர் மாக்ஸிஸ்ட்-லெலினிஸ்ட் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லப்படுகிறது.

தமிழ் ஈழத்தை அங்கீகரிக்க வேண்டும், திராவிட நாடு வேண்டும், தடா சட்டத்தை அமுல் செய்வதை தமிழக அரசு கைவிட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து அவர் உண்ணாவிரதமிருந்தார்

அன்னை பூபதி

## பொது அறிவுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி

[யாழ்ப்பாணம்]

அன்னை பூபதி நினைவுப் பொதுஅறிவுத்தேர்வு விடைத்தாள் திருத்தும்பணி இன்று 8.00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மீசாலை வீர விக்கினேஸ்வராக் கல்லூரி, ஆகிய மதிப்பீட்டு நிலையங்களிலும், மன்னார், முல்லைத்தீவு. வவுனியா, மணலாறு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் விடைத்தாள்கள் திருத்

கலை

## பண்பாட்டுக் கழக கருத்தரங்குகள்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் இன்று சனிக்கிழமை வலிகாமம் பிரிவிலும் தீவகப் பிரிவிலும் கடற்புலிகள் பிரிவிலுமாக மூன்று இடங்களில் கலை, இலக்கியம் மற்றும் பண்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகள் நடைபெறவிருக்கின்றன.

வலிகாமம்பிரிவில்மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் பி ப 4.00 மணிக்கு ''எங்களின் சொந்தப் பண்பாடு'' என்ற பொருளில் மூதறிஞர் க. சி. குலரத்தினம்அவர்கள் கருத்துரையாற்றுவார்

கடற்புலிகள் பிரிவில் குருநகர் பிரதேசச் செயலகத்தில் பி. ப. 4. 00 மணிக்கு 'போர்க் காலத்தில் கிராமியக் கலைகளின் பயன்பாடு'' என்ற பொருளில் திரு. எம். ஈ.

## தொண்டர் ஆசிரியருக்கு கல்விவளர். கழகம் ஆதரவு

யாழ் மாவட்ட தொண்டர் ஆசிரியர்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு மேலும் ஆதரவுகள் அதிகரித்து வருகின்றன.

இத்தொண்டர் ஆசிரியர்களுக்கு தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவது உட்பட சில தீர்மானங்களை கடந்த வாரம் கூடிய பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கல்வி வளர்ச்சிக் கழகம் ஏகமனதாக நிறைவேற்றியுள்ளது. அத் தீர்மானங்களாவன; சிறிலங்கா அரசு வேண்டுமென்றே நியமனம் வழங்காது காலம் தாழ்த்தும் தொண்டர்ஆசிரியர்களின் நியாயமான போராட்டத்தைக் கழகம் பரிபூரணமாக ஆதரிப்பதுடன் அவர்களது போராட்டத்திற்குகைகோர்த்துபங்களிக்கத் தயாராகவுள்ளது. இதே வேளை மேற்படி போராட்டத்தை கொச்சைப் படுத்த முனையும் சகல நிலைகளில் உள்ள அதிகாரிகளினது அறிக்கைகளையும் பேச்சுக்களையும் கண்டிக்கிறது;

மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய கடந்த வருடத்தைய உணவு முத்திரைகளை உடனடியாக வழங்க கல்வித்துறை அதிகாரிகளும், அரச அதிபரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்:

மாணவர்களது பரீட்சைகளை வேண்டுமென்றே பிற்போட்டு அவர்களது கல்வியை பாழடிக்கும்திட்டமிட்டசெயற்பாட்டை நிறுத்த அரசின் உயர் அதிகாரிகள் அழுத்தம் கொடுக்கவேண்டும். (ச)




## புலிகளின் ஆதரவாளரை தடுத்து வைத்தது தவறு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் எனக்கூறப்படும் திருச்சியை அடுத்துள்ள பூவரசன்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பிரபாகரன் என்பவர் தடா சட்டத்தின் கீழும், தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழும் தடுத்து வைத்துள்ளமை செல்லுபடியற்றது என சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர் பிணையில் வெளியே வர வாய்ப்பு இருக்கிறது என்பதற்காக மட்டும் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கொண்டுவருவது முறையற்றது என நீதிபதிகள் அருணாசலம், பிரதாப்சிங் ஆகியோர் தமது தீர்ப்பில் கூறியுள்ளனர்.

## காற்றுப்பலமாக வீசினாலும், மலையை அசைக்க முடியாது

### மகாபொல வைபவத்தில் லலித் அத்துலத்முதலி

(கொழும்பு)

காற்றுப் பலமாக வீசினாலும் மலையை அசைக்கமுடியாது. புத்திசாலியான மனிதன் புகழ்வதனாலோ அல்லது தூற்றுவதனாலோ மதி மயங்கமாட்டான் என்று மகாப்பொல புலமைப் பரிசில் வழங்கல் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

அங்கு மேலும் பேசுகையில், படித்தவர்கள் கல்வியறிவு மிக்கவர்கள் பரந்த மனப்பான்மையோடுதான் செயற்படுவார்கள். கல்வி என்பது அதற்கான வழியைச் சமைக்கும். சிந்தனை எப்போதும் பரந்துபட்டதாக இருக்க வேண்டும். புதிய கருத்துக்களை வரவேற்கவும், புதிய முறைகளை தெரிந்துகொள்ளவும், புதியவகையில் செயற்படுவதற்கும் இது உதவும்.

யார் சரியானவர்கள் என்பதல்ல பிரச்சினை எது சரியானது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். படித்தவர்கள் எதற்கும் பயந்து நடுங்கவோ அல்லது எந்தச் சக்திக்கும் அஞ்சவோ வேண்டியதில்லை. படிப்பறிவு பெறுதல் என்பது புதிய சிந்தனைகளையும் புதிய கருத்துக்களையும் தேடிப் பெறுதலாகும். இது பாடப்புத்தகங்களில் இருந்து மட்டும் பெற முடியாது. ஒருவரின் படிப்பு அல்லது ஒருவர் பெறும்கல்வி சமூகத்திற்கு பயன்தரக்கூடியதாக இருக்க வேண்டும். அது சமூகத்தில் யதார்த்தத்தோடு செயல்பட வைக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இவ் வைபவத்தில் பிரதமர் டி.பி.விஜயதுங்காவும் கலந்து கொண்டாரென்பது குறிப்பிடத்தக்கது

## இன்றைய போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் வலிகாமம் மேற்குப் பிரிவுக்கான இன்றைய போட்டியில் அராலி பாரதி அணியை எதிர்த்து அளவெட்டி வினாயகர் அணி விளையாடவுள்ளது, இப்போட்டி இன்று மாலை 3 00 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

## உரிமையாளரின் கவலையீனமே சைக்கிள் திருட்டிற்கு காரணம்

- நடேசன்

சைக்கிள் பாவனையாளர்களின் கவலையீனமும் அசமந்தப் போக்குமே சைக்கிள்கள் திருடப்படுவதற்குக் காரணமாகின்றது அவரவர் தத்தமது சைக்கிளைக் களவு போகாது இருப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்வதன் மூலமே சைக்கிள் திருட்டைத் தடுக்க முடியும் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. கா. நடேசன் தெரிவித்தார். கடந்த சில நாட்களாக இத்திருட்டைத் தடுத்து நிறுத்துவது தொடர்பாக அவர் கருத்துவெளியிடுகையில்; சைக்கிள் உரிமையாளர்கள் தத்தமது சைக்கிள்களைக் கண்ட இடங்களிலும் நிறுத்தாது அதற்கென அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்தி பூட்டி விடுவதன் மூலமே திருட்டைத் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதேவேளை வீடுகளில் சைக்கிளை நிறுத்தி வைக்கும் போதும் பூட்டி விடுதல் வேண்

இதேவேளை இச் சைக்கிள் திருட்டை ஒழிப்பதற்காகப் பொதுமக்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோரைக் கண்டாலோ அல்லது அறிந்தாலோ அருகிலுள்ள காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுப்பதன் மூலமும் அல்லது சந்தேக நபரை ஒப்படைப்பதன் மூலமும் காவல் துறையினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ராணுவ

மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லும் வழியில் ஆயுதப் படையினரால் துன்புறுத்தப் படுகின்றனர். மாணவர்கள் என அறிந்தும் சுடப்பட்ட அல்லது தாக்கப்பட்ட மாணவர்கள் பயங்கரவாதிகள் என பெயரிடப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். வடக்கு கிழக்கில் கல்வி ஆயுதப்படையினரால் சீரழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென கோரும் மகஜர் ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சுக்கும் செஞ்சிலுவை சங்கத்திற்கும், மனித உரிமைகள் குழு, ஐ நா. பாதுகாப்பு

# பொது அறிவுத் தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி

[யாழ்ப்பாணம்]

அன்னை பூபதி நினைவுப் பொதுஅறிவுததேர்வு விடைத்தாள் திருத்தும்பணி இன்று 8.00 மணிக்கு பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகிய மைய நிலையங்களில் ஆரம்பமாகின்றது.

விடைத்தாள் திருத்தும் பணிக்கு விருப்பம் தெரிவித்த சகலஆசிரியர்களும் தாம் பணியாற்றும் மதிப்பீட்டு நிலையங்களுக்கு இன்று காலை 8.00 மணிக்கு சமூகமளிக்குமாறு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம்கேட்டுக்கொள்கிறது.

அல்வாய் சின்னத்தம்பிமகா வித்தியாலயம், பருத்தித்துறை விக்கினேஸ்வராக் கல்லூரி, ஆகிய மதிப்பீட்டு நிலையங்களிலும், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, மணலாறு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் விடைத்தாள்கள் திருத்தும் பணி கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்திலும் வரும் திங்கட்கிழமை [6 4.92] எட்டுமணிக்கு ஆரம்பமாகும்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களைப் பெற விரும்புபவர்கள் அவ்வப் பகுதி விடுதலைப்புலிகள் மாணவர் இயக்க அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் மாணவர்இயக்கப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலி



தியாகச் சுடர்

அன்னை பூபதி

'படுகொலைகளை நிறுத்தக்கோரி
உன்னையே
பலிகொடுத்தாய்
பசியோடு வயிற்றைப்
பற்றி எரியவிட்டாய்'

அன்னை பூபதி நினைவஞ்சலி அடையாள உண்ணா விரதம் இன்று காலை 9 00 மணி தொடக்கம் பி. ப. 2 00 மணிவரையும், அதனைத் தொடர்ந்து நினைவஞ்சலிக் கூட்டமும் அம்பன் கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அருகாமையில் இடம்பெறும்.

வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம்
(சி/4222) மருதங்கேணி

வலிகாமம்பிரிவில்மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் பி ப 4.00 மணிக்கு ''எங்களின் சொந்தப் பண்பாடு'' என்ற பொருளில் மூதறிஞர் க. சி. குலரத்தினம்அவர்கள் கருத்துரையாற்றுவார்

கடற்புலிகள் பிரிவில் குருநகர் பிரதேசச் செயலகத்தில் பி. ப. 4. 00 மணிக்கு 'போர்க் காலத்தில் கிராமியக் கலைகளின் பயன்பாடு'' என்ற பொருளில் திரு. எம். ஈ. யோகேந்திரம் அவர்கள் கருத்துரையாற்றுவார்.

தீவகப்பிரிவின் கலை, பண்பாட்டுக்கழக செயலகத்தில் பி. ப. 4. 00 மணிக்கு 'இசைத்துறையின்இன்றையபயன்பாடு' என்ற பொருளில் நவாலியூர் திரு. நா. சச்சிதானந்தம் அவர்கள் கருத்துரையாற்றுவார்.

## அன்னைபூபதி நினைவு நாள் நிகழ்ச்சிகள்

★ வடமராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினரால் அடையாள உண்ணாவிரதமும் அஞ்சலிக் கூட்டமும் இன்று நடாத்தப்படும். இந் நிகழ்ச்சிகள் காலை 9.00 மணிக்கு அம்பன் கற்பகவிநாயகர் ஆலயமுன்பாக உண்ணாவிரதத்துடன் ஆரம்பமாகும்.

★ தென் தமிழீழ மக்களின் ஆதரவில் நீகன் நகரில் கப்டன் ஜிம்கலி சனசமூகநிலையத்தில் நாளை காலை 8 00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணிவரை அடையாள உண்ணாவிரதமும் மாலை 7.00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டமும் அதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

★ ஒட்டுமடம் கலைவாணி சனசமூக நிலையத்தினரால் பொன்னப்பாசுவாமி கோவில் முன்பாக நாளை காலை 8.00 மணிதொடக்கம் பி.ப.4 00 மணிவரை உண்ணாவிரதமும் அதனைத் தொடர்ந்து கருத்தரங்கும் இடம்பெறும்.

### கடற்புலி

யோரப் பகுதிகளை நோக்கி பீரங்கித்தாக்குதலும், துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றன. இத்தாக்குதலினால் ஏற்பட்ட சேதவிபரம் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

களின் கவலையீனமும் அசமந்தப் போக்குமே சைக்கிள்கள் திருடப்படுவதற்குக் காரணமாகின்றது அவரவர் தத்தமது சைக்கிளைக் களவு போகாது இருப்பதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்து கொள்வதன் மூலமே சைக்கிள் திருட்டைத் தடுக்க முடியும் என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் திரு. கா. நடேசன் தெரிவித்தார். கடந்த சில நாட்களாக யாழ். மாவட்டத்தில் பெரும்பாலாக நகரப் பகுதிகளில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

### கடற்படை

மீனவர்களைத் துன்புறுத்திப் பழியைச் சிறிலங்கா கடற்படை மேல் சுமத்துகிறது. இதனால் சிறிலங்காவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவில் விரிசலையும் ஏற்படுத்த முனைகிறது என்றார். சிறிலங்கா கடற்படை இந்தியமீனவரைத் தாக்குவதாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவைஎன்றும்கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

இந்திய இழுவைப்படகுகளின் பின்னால் ஒழித்து கள்ளத்தனமாக கடற்புலிகள் பாக்குநீரிணையைக் கடப்பதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தியக் கடலோரப் பாதுகாப்புப்படைகள், இந்திய மீனவர்கள் சிறிலங்கா கடற்பிராந்தியத்தில் நுழைந்து தொழில் செய்யாமல் தடுப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை பற்றியும் ஆராயப்பட்டது. புலிகள் இப்படி எல்லையை மீறித் தொழில் செய்யும் இந்திய மீனவர்களைத் துன்புறுத்தி அரசுக்குத் தொந்தரவைத் தருகிறார்கள். குறைந்த பட்சம் நூற்றுக்கும் அதிகமான இந்திய இழுவைப் படகுகள் எமது கடலெல்லையில், குறிப்பாக சிங்க இறால் அதிகமாகப்படும் கச்சதீவுக் கடலில் தொழில் செய்கிறார்கள். ஆனால் சுட்டால் மட்டுமே நாங்கள் திருப்பிச் சுடுகிறோம். அத்துமீறி எமது கடலில் நுழையும் இந்திய மீனவர்களை எல்லாம் நாம் கைது செய்வதென்றால் சிறிலங்கா கடற்படை அதன் பிரதான நோக்கத்திலிருந்து தவறிவிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

துவது தொடர்பாக அவர் கருத்துவெளியிடுகையில்; சைக்கிள் உரிமையாளர்கள் தத்தமது சைக்கிள்களைக் கண்ட இடங்களிலும் நிறுத்தாது அதற்கென அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிலையங்களில் நிறுத்தி பூட்டி விடுவதன் மூலமே திருட்டைத் தடுக்கக் கூடியதாக இருக்கும். இதேவேளை வீடுகளில் சைக்கிளை நிறுத்தி வைக்கும் போதும் பூட்டி விடுதல் வேண்டும்.

இதேவேளை இச் சைக்கிள் திருட்டை ஒழிப்பதற்காகப் பொதுமக்கள் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோரைக் கண்டாலோ அல்லது அறிந்தாலோ அருகிலுள்ள காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுப்பதன் மூலமும் அல்லது சந்தேக நபரை ஒப்படைப்பதன் மூலமும் காவல் துறையினருக்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# எப்-16 யுத்தவிமானங்கள்; இந்தியா வாங்க முயற்சி

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் அமெரிக்காவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். அவர் இவ்விஜயத்தின் போது அமெரிக்க எப்-16 யுத்த விமானங்கள், வேவு விமானங்கள், ராடர்கள், இராணுவ தளபாடங்கள் முதலியவற்றை கொள்வனவு செய்ய முயற்சி செய்வார் என பிபிஸி தெரிவித்தது

சரத்பவாரின் அமெரிக்க விஜயத்தின் போது இராணுவத் தளபாடக் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்காவின் இந்த உதவிகளுக்குப் பதிலாக இந்தியத் துறைமுகங்களை உபயோகிக்க அமெரிக்காவிற்கு அனுமதி வழங்குமாறு கேட்கப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள் பற்றியும், இலங்கை, பஞ்சாப் ஆகிய பகுதிகளில் அதன் அனுபவம் பற்றியும் அறிந்து கொள்ள அமெரிக்க இராணுவம் விரும்புவதாகவும் பிபிஸி தெரிவித்தது.

### பௌத்த

யாழ்ப்பாணம் செல்லவிருக்கும் பௌத்தகுருமார் பத்துப் பேரும் வரும் ஞாயிற்றுக்கிழமை கூடவிருக்கிறோம். அன்றைய கூட்டத்தில் பயணத்திற்கானஇறுதி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் சொன்னார்.

'இப்பொழுது வடக்கு-கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை நாம் வெறுக்கிறோம். இனங்களுக்கிடையில் சமத்துவமும், சமாதானமும் ஏற்பட வேண்டுமானால் இரு சாரார் மத்தியிலும் புரிந்துணர்வும், பரஸ்பர நம்பிக்கையும் அவசியம். இதனை மேற்கொள்ளவே நாம் யாழ்ப்பாணம் செல்ல விரும்புகிறோம்' என்று கூறிய அவர் நாம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் நாட்களில் சந்திக்க விரும்புவோரின் பெயர் விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் அதற்கான ஏற்பாடுகளை கவனிப்பர் என்றும் தெரிவித்தார்.

என அறிந்தும் சுடப்பட்ட அல்லது தாக்கப்பட்ட மாணவர்கள் பயங்கரவாதிகள் என பெயரிடப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். வடக்கு கிழக்கில் கல்வி ஆயுதப்படையினரால் சீரழிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டுமென கோரும் மகஜர் ஒன்றைப் பாதுகாப்பு அமைச்சுக்கும் செஞ்சிலுவை சங்கத்திற்கும், மனித உரிமைகள் குழு, ஐ நா. பாதுகாப்பு சபை, சிறிலங்கா ஜனாதிபதி ஆகியோருக்கும் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் மாணவர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு நீக்கம்

வவுனியா மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்குச்சட்டம் இன்று காலை ஆறு மணியுடன் நீக்கப்படும் என கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது. இந்த ஊரடங்கு முதலில் நாளை காலை ஆறுமணிவரை அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## மரண அறிவித்தல்

### கந்தையா சற்குணசிங்கம்

(அதிபர் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயம்
பதில் கொத்தணி அதிபர், புதுக்குளம்)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மீசாலை தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான திரு. கந்தையா சற்குணசிங்கம் 02-04-92 அன்று காலமானார். அன்னார் மட்டுவில் திரு. திருமதி கந்தையாவின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், திரிபுரசுந்தரியின் தந்தையும், திருமதிகள் ந கமலாதேவி, வே. இந்திராதேவி, பூ இலட்சுமிதேவி, க சுந்தரராஜா (கிராமசேவையாளர், மீசாலை வடக்கு), க. குலதிலகராஜா, க.சிவானந்தராஜா ஆகியோரின் சகோதரரும், திருமதி க சிவபாக்கியத்தின் மைத்துனரும், எஸ் கணேசனின் [ஓய்வுபெற்ற பிரதம லிகிதர் ஒய்வூதியக்கிளை, யாழ்ப்பாணம்] சகலனும், க. முகுந்தனின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2-4-92 வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்தில் நடைபெற்றது என்பதனை உற்றார், உறவினருக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:

மீசாலை கிழக்கு, எஸ். கணேசன்
மீசாலை. (2410) (சகலன்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம் பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது